மே - 10

# TNPSC துளிகள்

- முஸ்தபா கட்ஹிமி என்பவர் ஈராக்கின் புதிய பிரதமராக உருவெடுத்துள்ளார்.
    - இதற்கு முன்பு, அரசாங்கத்திற்கு எதிரான மிகப்பெரிய போராட்டங்களின் காரணமாக 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அடேல் அப்துல் மஹிதி என்பவர் அந்நாட்டின் பிரதமர் பதவியிலிருந்து விலகினார்.
- வங்கியியல் தொடர்பான நடவடிக்கைகளில் பங்கு கொள்ளும் கூட்டுறவு வங்கிகள் "வங்கித் துறை நிறுவனத்தின்" வரையறைக்குள் வரும் என்று இந்திய உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
    - இது தொடர்பாக, இந்திய நாடாளுமன்றமானது சர்பேசி சட்டம், 2002ன் கீழ் கடனை மீட்பதற்கான நடைமுறையை வழங்கக்கூடிய அதிகாரத்தைக் கொண்டு உள்ளது.
- மகாராஷ்டிர மாநில அரசானது ஜுன் 30 ஆம் தேதி வரை அம்மாநிலம் முழுவதும் உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கான பணி நேரத்தை 12 மணி நேரமாக நீட்டித்துள்ளது.
    - இடப்பெயர்வுத் தொழிலாளர்கள் தங்களது சொந்த ஊர்களுக்குத் திரும்பி உள்ளதால் தொழிற்சாலைகள் எதிர்கொள்ளும் தொழிலாளிகளின் பற்றாக்குறையின் காரணமாக இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- "சஞ்ஜீவனி" என்ற செயலியானது ஆயுஷ் அமைச்சகத்தினால் உருவாக்கப் பட்டுள்ளது.
    - இது கோவிட் - 19 நோய்த் தொற்றைத் தடுப்பதில் ஆயுஷ் முறையை அடிப்படையாகக் கொண்ட இடையீடுகளின் தாக்கம் குறித்து ஆய்வு செய்வதற்கு உதவ இருக்கின்றது.
- தமிழ்நாடு மாநில அரசானது தனது பணியாளர்களின் ஓய்வு பெறும் வயதை 58லிருந்து 59 ஆக அதிகரிக்க முடிவு செய்துள்ளது.
    - இது அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்கள், கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் ஆகியோருக்குப் பொருந்தும்.
- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டமானது இந்தியாவின் நல்லெண்ணத் தூதராக உள்ள நடிகை தியா மிர்சாவின் பதவிக் காலத்தை 2022 ஆம் ஆண்டு வரை நீட்டித்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவில் இணையச் சேவை ஊடுருவல்

- சமீபத்தில் இந்தியாவின் இணையம் மற்றும் கைபேசி மன்றமானது ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, இந்தியாவின் ஊரகப் பகுதிகளில் இணையத்தைப் பயன்படுத்தும் பயனாளிகளின் எண்ணிக்கையானது (227 மில்லியன்) நகர்ப்புறப் பகுதிப் பயனாளிகளுடன் (205 மில்லியன்) ஒப்பிடும் பொழுது 10% அதிகரித்துள்ளது.
- இணையச் சேவைப் பயன்பாட்டைப் பொறுத்த வரையில், அமெரிக்கா (88%) மற்றும் சீனாவிற்கு (61%) அடுத்து இந்தியா (40%) உள்ளது.
- இணையச் சேவையைப் பயன்படுத்துவதில் ஆண்களை விட பெண்களே அதிகமாக உள்ளனர்.
- இணையச் சேவையைப் பயன்படுத்துவதில் மாநிலங்களில் தில்லி முதலிடத்திலும், அதற்கு அடுத்து கேரள மாநிலமும் உள்ளது.

## இந்தியாவில் இணையச் சேவைப் பயன்பாடு

- உலகின் முன்னணி தரவு, கண்ணோட்டம் மற்றும் ஆலோசனை வழங்கும் ஒரு நிறுவனமான கந்தார் எனும் நிறுவனமானது இந்தியாவில் டிஜிட்டல் தகவமைப்பு மற்றும் பயன்பாட்டுப் போக்குகள் குறித்த அறிக்கையான “ICUBE 2019” என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் இருக்கும் மாதாந்திர இணையப் பயன்பாட்டாளர்கள் அனைவரும் இணையத்தை அணுக கைபேசியை ஒரு சாதனமாகப் பயன்படுத்துகின்றனர்.
- 84%ற்கும் மேற்பட்ட பயனாளிகள் பொழுதுபோக்குப் பயன்பாடுகளுக்காக இணையத்தைப் பயன்படுத்துகின்றனர்.

## வந்தே பாரத் திட்டம்

- இந்திய அரசு “வந்தே பாரத் திட்டத்தை” தொடங்கி இருக்கின்றது.
- இது மிகப்பெரிய மீட்பு நடவடிக்கைகளில் ஒன்றாக கருதப்படுகின்றது.
- இது உலகம் முழுவதும் சிக்கித் தவிக்கும் இந்தியர்களைத் தாயகம் அழைத்து வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த “வந்தே பாரத் திட்டம்” முழுவதும் ஏர் இந்தியா நிறுவனத்தினால் மேற்கொள்ளப் படுகின்றது.




# சர்வதேசச் செய்திகள்

## ஈரானின் புதிய நாணயம்

- ஈரான் தனது நாணயத்தை மறு பெயரிட்டு மறு மதிப்பிட முடிவு செய்துள்ளது.
- ஈரானின் பணமானது அடுத்து “டோமன்” என்று அழைக்கப்பட இருக்கின்றது.
- ஈரானின் தற்போதைய நாணயம் “ரியால்” என்று அழைக்கப்படுகின்றது.
- தற்பொழுது 1 டோமன் ஆனது 10,000 ரியாலுக்குச் சமமாகும்.
- இது ரியாலில் 4 சுழியங்களின் குறைப்பைக் குறிக்கின்றது.
- ஜெக்ரான் என்பது மற்றொரு நாணய மதிப்பாகும்.
- 100 ஜெக்ரான் சேர்ந்தது 1 டோமனாகும்.



# பொருளாதாரச் செய்திகள்

## மீன்வளத் துறைக்கான அறிவுறுத்தல்கள்

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR - Indian Council of Agricultural Research) மீன்வளத் துறைக்கான அறிவுறுத்தல்களை 12 மொழிகளில் வெளியிட்டுள்ளது.
- இந்தி மற்றும் ஆங்கிலத்தைத் தவிர, இந்த அறிவுறுத்தல்கள் 10 மொழிகளில் வழங்கப் பட்டுள்ளன.
- இவை பாரக்பூரில் உள்ள ICAR - மத்திய உள்நாட்டு மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தினால் (CIFRI - Central Inland Fisheries Research Institute) தயாரிக்கப்பட்டு, வெளியிடப் பட்டுள்ளது.
- மீன்வளத் துறைக்கான இந்த அறிவுறுத்தல்கள் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் (FAO - Food and Agriculture Organization) உலகளாவிய அறிவுறுத்தல்களின் ஒரு பகுதியாக உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கொரானா வைரஸ் ஆய்வுக் கூடச் சோதனை முறை

- இந்தியாவில் ஹைதராபாத்தில் உள்ள செல் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையமானது (CCMB - Centre for Cellular and Molecular Biology) நாட்டில் கோவிட் - 19 வைரஸின் மாதிரிகளைக் கலந்து ஆராய்ச்சி செய்யும் ஒரே மையமாகும்.
- மாதிரிகள் கலப்புச் சேகரிப்பு முறை என்பது வைரஸ் மாதிரிகளைச் சேகரிக்கும் ஒரு செயல்முறையாகும்.
- ஹைதராபாத்தில் உள்ள CCMB ஆனது பெங்களூருவில் உள்ள ஐஸ்டெம் ஆராய்ச்சி நிறுவனத்துடன் (தனியார் நிறுவனம்) இணைந்துள்ளது.
- இது மனித உயிரணுக்களில் புதிய கொரானா வைரசை வளர்க்கும் ஒரு முயற்சியாகும். இது வைரசிற்காக சாத்தியமுள்ள தடுப்பு மருந்துகள் மற்றும் நோய் தீர்க்கும் மருந்துகளின் ஆய்வகச் சோதனைக்கு அனுமதிக்கின்றது.
- இந்தக் குழுவானது ஐஸ்டெமின் மனித நுரையீரல் தோல் மேற்புறச் செல் கலாச்சார முறையைப் பயன்படுத்துகின்றது.
- இது கோவிட் - 19 நோய்த் தொற்றின் நோயியல் மற்றும் மூலக்கூறுப் பண்புகளை அறிந்து கொள்ள உதவுகின்றது.
- ஆய்வகத்தில் (கண்ணாடியில்) மேற்கொள்ளப்படும் இந்தச் சோதனை என்பது பிரித்தெடுக்கப் பட்ட திசுக்கள், உயிரணுக்கள் மற்றும் உறுப்புகள் ஆகியவற்றைக் கொண்டு வாழும் உயிரினத்திற்கு வெளியே மேற்கொள்ளப்படும் ஒரு சோதனையாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## விசாகப்பட்டினம் வாயுக் கசிவு

- ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் உள்ள தென்கொரிய நிறுவனமான எல்ஜி பாலிமர்ஸ் ஆலையிலிருந்து ஸ்டைரின் என்ற வாயு கசிந்து விபத்து ஏற்பட்டது.
- ஸ்டைரின் என்பது நரம்பு - நச்சாக அடையாளம் காணப்பட்ட ஒரு ரசாயனப் பொருளாகும்.
- இது மேலும் எத்தினைல்பென்சின், வினைல்பென்சின் மற்றும் பினைல்எத்தீன் என்றும் அழைக்கப்படுகின்றது.
- இதன் வேதியியல் வாய்ப்பாடு $C_6H_5CH = CH_2$ என்பதாகும்.
- ஸ்டைரின் வாயு என்பது நிறமற்ற, மணமற்ற ஒரு வாயு ஆகும்.
- ஸ்டைரின் வாயு என்பது அதிக அளவில் எரியக்கூடிய மூலப் பொருளான ஸ்டைரினின் வழிப் பொருளாகும்.
- ஸ்டைரின் ஆனது மின் விசிறி இறக்கைகள், கோப்பைகள் மற்றும் வெட்டுக் கருவிகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் பொருள்களைத் தயாரிப்பதற்கான ஒரு மூலப் பொருளாக பயன்படுத்தப்படுகின்றது.
- இது பாலிஸ்டைரின் நெகிழிகள், கண்ணாடியிழை, இரப்பர் மற்றும் மரப்பாய் ஆகியவற்றை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் ஒரு எரியக்கூடிய திரவம் ஆகும்.
- இது வாகன வெளிசெல் நீர்மம், புகையிலைப் புகை, மற்றும் பழங்கள் & காய்கறிகள் போன்ற இயற்கை உணவுகள் ஆகியவற்றிலும் காணப் படுகின்றது.



# மாநிலச் செய்திகள்

## உத்தரப் பிரதேசத்தில் தொழிலாளர் சட்டங்கள்

- உத்தரப் பிரதேச மாநில அரசானது அம்மாநிலத்தில் அடுத்த 3 ஆண்டுகளுக்கு தொழிலாளர் சட்டங்களை நிறுத்தி வைப்பதற்கான ஒரு அவசரச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.
- இருந்த போதிலும், இந்த அவசரச் சட்டமானது கட்டுமானம் & இதரக் கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டம், கொத்தடிமைச் சட்டம், தொழிலாளர் இழப்பீட்டுத் தொகைச் சட்டம் மற்றும் பணவழங்கீட்டு ஊதியச் சட்டம் ஆகியவற்றை உள்ளடக்க வில்லை.
- தொழிலாளர் விவகாரம் என்பது பொதுப் பட்டியலில் உள்ள ஒரு கூறாகும்.
- எனவே, மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் இரண்டும் தங்களது சொந்தச் சட்டங்களை உருவாக்கிக் கொள்ளலாம்.
- இருப்பினும், அதற்கு மத்திய அரசின் அனுமதி தேவையாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★